தினத்தந்தி

சென்னை 9-10-2019

### மாநில ஜூனியர் தடகளம்:

# செயின்ட் ஜோசப்ஸ் அகாடமி 'சாம்பியன்'

சென்னை, அக்.9-

33-வது மாநில ஜூனியர் ஓபன் தடகள சாம்பியன்ஷிப் போட்டி சத்தியமங்கலத்தில் கடந்த 3 நாட்கள் நடந்தது. இதன் ஆண்கள் பிரிவில் செயின்ட் ஜோசப்ஸ் ஸ்போர்ட்ஸ் அகாடமி (சென்னை) 20 தங்கம், 18 வெள்ளி, 18 வெண்கலப்பதக்கத்துடன் 354 புள்ளிகள் குவித்து சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியது. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் (எஸ்.டி.ஏ.டி.) 15 தங்கம், 19 வெள்ளி, 10 வெண்கலப்பதக்கத்துடன் 291 புள்ளிகள் எடுத்து 2-வது இடம் பெற்றது. பெண்கள் பிரிவில் எஸ்.டி.ஏ.டி. 19 தங்கம், 21 வெள்ளி, 16 வெண்கலப்பதக்கத்துடன் 363 புள்ளிகள் குவித்து சாம்பியன் பட்டத்தை தனதாக்கியது. செயின்ட் ஜோசப்ஸ் ஸ்போர்ட்ஸ் அகாடமி 21 தங்கம், 14 வெள்ளி, 12 வெண்கலப்பதக்கத்துடன் 319 புள்ளிகள் பெற்று 2-வது இடத்தை பிடித்தது. 673 புள்ளிகளுடன் செயின்ட் ஜோசப்ஸ் ஸ்போர்ட்ஸ் அகாடமி ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியது. 654 புள்ளிகள் பெற்ற எஸ்.டி.ஏ.டி. ஒட்டுமொத்தத்தில் 2-வது இடத்தை பெற்றது.

101019